# உள்ளே...




5




148




260




463




602




680

# சங்கர்லால் துப்பறிகிறார்

## 1

சங்கர்லால் மேசையின் மேல் இரண்டு கால்களையும் தூக்கிப் போட்டுக் கொண்டு ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது தொலைபேசி மணி அடித்தது.

தேநீருடன் மாடிப்படிகளில் ஏறிக்கொண்டிருந்த மாது தேநீரை சங்கர்லாலிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ஓடிப்போய்த் தொலைபேசியை எடுத்தான்.

“ஹலோ.... ஹலோ. நான்தான் மாது பேசுகிறேன். யார் வேண்டும் உங்களுக்கு?”

“ஹலோ... மாதுவோ? நான் நான்தான் உதவிப் போலீஸ் கமிஷனர் வகாப் பேசுகிறேன். பங்களாவிலே தம்பி இருக்கிறாரா?”

“இருக்கிறார்.”

“அவரைப் பேசச் சொல்லு. ராசா துளசிங்கம் இருக்கிறார் அல்லவா? அவரை, அவர் மகளே கொலை செய்துவிட்டாள்! அவளைக் கைது செய்திருக்கிறேன்! தம்பியைக் கூப்பிட்டு பேசச் சொல்லு.”

மாது, தொலைபேசியை மேசையின் மேல் வைத்துவிட்டுச் சங்கர்லால் இருந்த அறைக்கு ஓடி வந்து “தம்பீ, தம்பீ, விரைவாக வா. உதவிப் போலீஸ் கமிஷனர் வகாப் பேசுகிறார். ராசா துளசிங்கத்தை அவர் மகள் கொலை செய்துவிட்டாளாம்!” என்றான்.

சங்கர்லால் எந்தவிதப் பரபரப்பும் கொள்ளாமல், கையிலிருந்த காலிக் கோப்பையை மேசையின்மேல் வைத்து விட்டு “அவள் அகப்பட்டாளா இல்லையா?” என்று கேட்டார்.

“அகப்பட்டுக் கொண்டாளாம். அவளைக் கைது செய்து விட்டார்களாம்” என்றான் மாது.

"அப்புறம் நான் எதற்கு?" என்று கேட்டுக்கொண்டே சங்கர்லால் எழுந்து தொலைபேசியை எடுத்தார்.

"ஹலோ... நான் சங்கர்லால் பேசுகிறேன். வணக்கம் வகாப். என்ன நடந்தது?"

"ஹலோ... வணக்கம் சங்கர்லால். நான், இங்கே, ராசா துளசிங்கம் பங்களாவிலிருந்து பேசுகிறேன். ராசா துளசிங்கத்தை அவர் மகள் இந்திராதேவி கொலை செயதுவிட்டாள்! அவளைக் கைது செய்து விட்டேன். நீங்கள் உடனே இங்கு வாருங்கள்"

"கொலை செய்தவளைத்தாள் கைது செய்து விட்டீர்களே, அப்புறம் நான் எதற்கு?"

"பெற்ற அப்பாவை மகள் கொன்றாள் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை சங்கர்லால்."

"அப்படியானால் அவளை ஏன் கைது செய்தீர்கள்?"

"ராசா துளசிங்கத்தைக் கொலை செய்த கத்தி அவள் கையிலிருக்கும்போது, நான் அவளை எப்படிக் கைது செய்யாமலிருக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள்?"

"அப்படியானால் கைதுசெய்து கொண்டு போங்கள்"

"என்ன சங்கர்லால்? பெற்ற அப்பாவை மகள் கொல்லை செய்வாளா?"

"அப்படியானால் விட்டுவிடுங்கள். ஆ... ஆ.... ஆ...?"

"சங்கர்லால், விளையாடாதீர்கள். நீங்கள் நினைப்பது போல எளிதானதல்ல! இந்தக் கொலையில் பல மர்மங்கள் மறைந்திருக்கின்றன. ராசா துளசிங்கம் பெரிய கோடீசுவரர். அவர் அருமைப் பெண், இந்திரா தேவியைத் தவிர அவருக்கு வேறு குழந்தைகள் கிடையாது. இந்த ஒரே ஒரு செல்லப் பெண்தான் அவர் வாரிசு. அவர் மனைவி இறந்து இருபத்தாறு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. எனவே, ராசா துளசிங்கத்தினுடைய சொத்து முழுவதற்கும் இந்திரா தேவிதான் உடைமைக்காரி. அப்பா இருந்தாலும், இறந்தாலும் அவ்வளவும் அவளைச் சேர்ந்தததுதான். அப்படி இருக்கும்போது, அவள் ஏன் அப்பாவைக் கொல்ல வேண்டும்?" என்று கேட்டுவிட்டுச் சங்கர்லால் பதிலுக்காகக்

காத்திருந்தார் வகாப். சங்கர்லால் சற்றுச் சிந்தித்துவிட்டு, "இப்பொழுது எதுவும் சொல்ல முடியாது வகாப். நீங்கள் அவளைப் போலீஸ் பங்களாவிற்குக் கொண்டுபோய்க் கவனமாகப் பாதுகாப்புடன் பார்த்துக் கொள்ளுங்கள். நான் மாலை ஏழு மணிக்கு வந்து பார்க்கிறேன்" என்றார்.

"நல்லது சங்கர்லால்" என்று சொல்லிவிட்டுத் தொலைபேசியை வைத்தார் வகாப்.

மாது, சங்கர்லாலுக்கு அருகில் போய், "என்ன தம்பி இது? அந்தப் பெண்தான் அப்பாவைக் கொன்றாளா?" என்று அக்கறையுடன் கேட்டார்.

"என்ன மாது இது? என அறிவுக்கு நீ கொடுக்கிற மதிப்பிற்கு அளவே கிடையாது போலிருக்கிறது? தொலைபேசியிலேய எல்லாவற்றையும் துப்பறியும் அளவிற்கு இன்னும் என் மூளை வளர்ந்து விடவில்லையப்பா!" என்று சொல்லிவிட்டு, நாற்காலியில் போய் உட்கார்ந்து, கால்கள் இரண்டையும் மேசையின்மேல் தூக்கிப் போட்டுக்கொண்டு, மறுபடியும் அந்தப் புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினார் சங்கர்லால்.

"தம்பி எப்பொழுதாவது சற்று எரிச்சலுடன் பதில் சொன்னால், அப்பொழுது தம்பியின் மூளை எதற்காகவோ வேலை செய்து கொண்டிருக்கிறது" என்று பொருள் என்பது மாதுவுக்குத் தெரியும். எனவே மாது, காலியான கோப்பையை எடுத்துக்கொண்டு எதுவும் பேசாமல் மெல்லப் படிகளில் இறங்கிப் போய்விட்டான்.

* * *

ஏழு மணி இருக்கும். நன்றாக இருட்டிவிட்டது. சங்கர்லாலின் கார், போலீஸ் பங்களாவின் வாயிலில் போய் நின்றது. காரை விட்டுச் சங்கர்லால் கீழே இறங்கிப் பங்களாவிற்குப் போனார். முதல் அறையில் நின்று கொண்டிருந்த வகாப் சங்கர்லாலை வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு போனார். இருவரும் உள்ளே நடு மண்டபத்திற்கு நடந்தே போனார்கள். அங்கே –

பெரிய கண்ணாடிச் சன்னலின் வழியாக வெளியே எங்கேயோ பார்த்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்த

இந்திராதேவி, எவரோ நடந்து வரும் ஓசை கேட்டுச் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

சங்கர்லாலும், வகாப்பும் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

இந்திராதேவி, சேலைத் தலைப்பை எடுத்து தலையில் போட்டுக்கொண்டு எழுந்து நின்றாள்.

சங்கர்லால், அவருக்கு அருகில் வந்து நின்றுகொண்டு 'துன்பம் தருவதற்கு மன்னிக்க வேண்டும்' என்றார்.

இந்திராதேவி பதில் எதுவும் சொல்லவில்லை.

சங்கர்லால், வகாபுக்கு கண் சாடை காட்டினார். உடனே, வகாப் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டார்.

வகாப் போனதும், சங்கர்லால், பெரிய கண்ணாடிச் சன்னலுக்கு அருகில் கிடந்த நாற்காலியில் போய் உட்கார்ந்தார். இந்திராதேவியும் அருகில் வந்து நின்றாள்.

சங்கர்லால், இந்திராதேவியிடம் ஏதோ கேள்வி கேட்பதற்கு வாயைத் திறந்தார். அப்போது-

சன்னலுக்கு வெளியே இருந்த செடிகளுக்குப் பக்கத்தில் இரண்டு மூன்று தலைகள் தெரிந்தன!.

திடீரென்று செடிகளுக்கு அருகில் இரண்டு மூன்று தலைகள் தெரிவதைச் சங்கர்லால் பார்த்து விட்டார். ஆனால், இந்திராதேவி அதை கவனிக்கவில்லை. அவள், சங்கர்லால், என்ன கேள்வி கேட்கப் போகிறாரோ என்று மிரண்டு, சங்கர்லால் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்ததால், திடீரென்று செடிகளுக்குப் பக்கத்தில் தெரிந்த இரண்டு மூன்று தலைகளைக் கவனிக்கவில்லை!

திடீரென்று செடிகளுக்குப் பக்கத்தில் தெரிந்த இரண்டு மூன்று தலைகளைப் பார்த்ததும், சங்கர்லால் திறந்த வாயை மூடிக்கொண்டார். அடுத்த வினாடி -

சங்கர்லால் எழுந்து, மண்டபத்தைக் கடந்து, வெளியே வகாப் நின்று கொண்டிருந்த இடத்திற்கு விரைந்து வந்தார்.

வகாப், வெளியே எங்கேயோ பார்த்துக்கொண்டு எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சங்கர்லால், அவருக்கு அருகில் சென்றார். அவர் காலில் கிரேப் ஷூ அல்லவா? அதனால் ஓசையே கேட்கவில்லை. சங்கர்லால் வரும் ஓசை எதுவும் கேட்காததால் வகாப், இன்னும் அசையாமல் வெளியே எங்கேயோ பார்த்துக் கொண்டு எதையோ ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சங்கர்லால், மெல்ல வகாபிற்கு அருகில் போய் அவர் தோளைத் தொட்டார்.

வகாப் நின்று கொண்டிருப்பது போலீஸ் பங்களாவில்தானே! அதனால் கொஞ்சம்கூடப் பதறாமல், தன்னைத் தொட்டது யார் என்று திரும்பிப் பார்த்தார்.

சங்கர்லால் சிரித்துக் கொண்டே "என்ன வகாப், எதைப்பற்றி இவ்வளவு ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"எல்லாம் இந்திராதேவியைப் பற்றித்தான். திருமணம் ஆகாத பெண்; பெரும் பணக்காரி. அவள் நினைத்தால் இந்த நகரத்தையே விலைக்கு வாங்கிவிடலாம்! நல்லவள்! இதுவரை அவளைப்பற்றிக் குறைவாகவோ, குற்றமாகவோ எவரும் சொன்னதில்லை. அவள் போய் இப்படிக் கொலைக் குற்றத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாளே" என்று சொல்லி வருத்தப்பட்டார் வகாப்.

சங்கர்லால் சிரித்துக்கொண்டே, "அவளைக் கையும், கத்தியும், கறையுமாகப் பிடித்த நீங்களே, அவளை விடுதலை செய்துவிடுவீர்கள் போலிருக்கிறதே?" என்றார்.

"அப்படிச் சொல்லாதீர்கள் சங்கர்லால், என் கடமையை நான் செய்தே தீருவேன். இரக்கம் கடமைக்கு அப்பாற்பட்டது. வாழ்க்கையைத் துய்க்காத அந்தப் பெண்ணின் எதிர்காலம், அவள் பார்த்தறியாத சிறையில் பாழாகிவிடுமோ என்றுதான் துன்பம் கொள்கிறேன்' என்றார் வகாப், சோக ஒலியில்..

சங்கர்லால் ஏதோ சொல்ல வாயைத் திறந்தார். அதற்குள் வகாப், 'பார்த்தீர்களா, நீங்கள் என்ன சொல்ல வந்தீர்கள் என்பதை

கூடக் கேட்காமல் நான் பாட்டிற்கு எதை எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறேன். சொல்லுங்கள், நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள். இந்திராதேவி என்ன சொல்லுகிறாள்?' என்று படபடவென்று கேட்டார் வகாப்.

சங்கர்லால் கொஞ்சம் சிந்தித்தார், பிறகு எதைச் சொல்ல அவர் வாயைத் திறந்தாரோ அதை மறைத்து விட்டு, 'இந்திராவோடு நான் இன்னும் பேசவில்லை. நான் அவளிடம் கேள்வி கேட்பதற்காக வாயைத் திறந்தேன். அப்பொழுது, கண்ணாடிச் சன்னலுக்கு வெளியே, சன்னலை ஒட்டிச் செடிகள் இருக்கிறது பாருங்கள்! அந்தச் செடிகளுக்குப் பக்கத்தில் இரண்டு மூன்று தலைகள் தெரிந்தன. உடனே, நான் வாயை மூடிக் கொண்டேன். அந்தத் தலைகளைக் காணோம்! இந்தப் பங்களாவிற்குள் வேடிக்கை பார்க்க வெளியிலிருந்து எவரும் இங்கே வர முடியாது என்பது எனக்குத் தெரியும். இந்தப் பங்களாவிற்குள்ளிருக்கும் ரிசர்வ் கான்ஸ்டபிள்கள் எட்டிப் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், நான் அவர்களைப் பார்த்ததும், அவர்கள் உடனே மறையவேண்டிய தேவை இல்லை. வெறும் வேடிக்கை பார்ப்பவர்களாய் இருந்தால், அங்கேயே நின்றிருக்கலாம் அல்லவா? அவர்களுக்கும் இந்திராவிற்கும் இரகசியச் சாடைகள் இருக்குமோ என்று எனக்கு ஐயம். அதனால் இங்கே மறைந்து கொண்டு பார்க்க வந்தேன். உங்களுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே பார்த்து விட்டேன்' என்றார் சங்கர்லால்.

வகாப் ஆசையோடு, 'என்ன, கண்டு பிடித்தீர்களா' என்று கேட்டார்.

'கண்டுபிடித்து விட்டேன். அவர்கள் மொத்தம் மூவர். மூவரும் ரிசர்வ் கான்ஸ்டபிள்கள்தாம். அவர்களில் ஒருவன் இந்திரா தேவியை எப்படியாவது விடுதலை செய்து விடவேண்டும் என்று துடிக்கிறான். தான் மட்டும் தனியாக நடமாடினால் ஐயம் கொள்ள வாய்ப்பு உண்டு என்று எண்ணி, தன் கூட மற்ற இருவரையும் அவன் அழைத்துக் கொண்டு அவன் வந்திருக்கிறான். நான் இங்கு வந்ததும், அவன் அவளிடம், என் கேள்விகள் எதற்கும் சரியான விடை சொல்லக் கூடாது என்பதைச் சொல்லி விட்டுப் போய்விட்டான்' என்று விவரமாகச் சொன்னார் சங்கர்லால்.

‘அப்படியானால், அவள் அப்பாவைக் கொன்றது அவள் தானோ?’ என்று திடுக்கிட்டுக் கேட்டார் வகாப்!

‘இவ்வளவு பெரிய கேள்விக்குச் சரியான பதில் சொல்லத்தானே நான் துப்பறிந்து வருகிறேன் உங்களுடைய இந்தப் பெரிய கேள்விக்குச் சரியான பதில் சொல்ல இன்னும் பல மாதங்களாகும், வாகப்’ என்றார் சங்கர்லால் மிகவும் அமைதியாக!

‘அது எனக்குத் தெரியும் சங்கர்லால். இந்திராதேவிக்கு இந்தக் கொலையில் தொடர்பு உண்டு என்று நினைக்கிறீர்களா என்பதை மட்டும் சொன்னால் போதும்’ என்றார் வகாப்,

இந்த கேள்விக்குப் பதில் சொல்லலாமா என்று சங்கர்லால் கொஞ்சநேரம் சிந்தித்துவிட்டு, ‘உண்டு’ என்று வாயைத் திறந்து சொன்னார்!

இந்தப் பதிலைக் கேட்டுத் திடுக்கிட்டு வாயைத் திறக்காமல் நின்றார் வகாப்!

குற்றம் குறை இல்லாத, அழகு நிறைந்த கோடீசுவர இளம் பெண் ஒருத்தி, இப்படிச் சிக்கிக் கொண்டாளே என்று உதவிப் போலீஸ் கமிஷனர் வகாபிற்கு மிகவும் வருத்தம்.

மலைத்து நிற்கும் வகாபைப் பார்த்து மெல்லச் சிரித்து விட்டு உள்ளே போனார் சங்கர்லால். உள்ளே -

இந்திரா தேவி, இன்னும் அந்த இடத்திலேயே, அப்படியேதான் நின்று கொண்டிருந்தாள்.

சங்கர்லால், அவளுக்கு அருகில் போய், மன்னிக்க வேண்டும். நீங்கள் நின்று கொண்டே தான் இருப்பீர்கள் என்று நினைத்திருந்தால் நான் விரைவில் வந்திருப்பேன் என்றார் மெல்லிய குரலில்.

இதைக் கேட்டதும் இந்திரா, நிமிர்ந்து சங்கர்லாலைப் பார்த்தாள். சங்கர்லால் கேலி செய்கிறாரா, அல்லது இரக்கங்கொண்டு சொல்லுகிறாரா என்பதை அவர் குரலிலிருந்து அவளால் தெரிந்து கொள்ள முடியவில்லை; அவர் முகத்தைப்

பார்த்தாவது தெரிந்து கொள்ளலாமே என்றுதான், அவள் சங்கர்லால் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அந்த முகத்தில் -

கேலி செய்வதாக; அவளுக்குப் படவில்லை. இரக்கம் இருக்கிறதா என்று துருவிப் பார்த்தாள். அழகு நிறைந்த அந்த முகத்தில், இரக்கத்திற்கும் மேலான கருணை படர்ந்து கிடப்பதை அவள் கண்டாள்.

இந்திரா, சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள். ஆனாலும், அவள் முகத்தில் படர்ந்திருந்த துன்பம் கரையவில்லை. அப்படியேதான் இருந்தது.

சங்கர்லால் இந்திராவைப் பார்த்து, 'நீங்கள் மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள். இன்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் நாளை வருகிறேன்' என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தார். அவர் அங்கிருந்து நடந்து செல்லும் ஓசையே கேட்கவில்லை!

சங்கர்லால் போவதை இந்திரா பார்த்தாள். அவர் மறையும் வரை அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் மறைந்ததும்-

தன் கண்விழிகளில் நிறைந்துவிட்ட கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

மறுநாள் காலை, மணி ஒன்பது இருக்கும். சங்கர்லாலின் கார், போலீஸ் பங்களாவின் வாயிலில் வந்து நின்றது.

கார் நின்றதும், காருக்குள்ளிருந்து சங்கர்லாலும் வகாபும் இறங்கினார்கள்.

வகாப், சங்கர்லாலைப் பார்த்து, "சங்கர்லால், நான் இங்கேயே தங்கும் அறையில் இருக்கிறேன். நீங்கள் உள்ளே போய், இந்திராதேவியைப் பாருங்கள்" என்றார்.

'சரி' என்று சொல்லிவிட்டு உள்ளே போனார் சங்கர்லால். உள்ளே -

தனி அறை ஒன்றில், சாய்வு நாற்காலியில், துன்பமே உருவாய் உட்கார்ந்திருந்தாள் இந்திரா.

சங்கர்லால் நடந்து வரும்போது தான் ஓசைகேட்காதே! சங்கர்லால்வந்து, கதவோரத்தில் நின்றுகொண்டு, அவளையே

பார்த்துக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரியாது. நீண்ட நேரம் ஆனபிறகும் கூட-

அவள் தலையை நிமிர்த்தவில்லை. அப்படியேதான் உட்கார்ந்திருந்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த சங்கர்லாலுக்குப் பல உண்மைகள் பளிச்சென்று தெரிந்தன.

இப்பொழுது அவள் உடுத்திருக்கும் உடை, நேற்று உடுத்திருந்ததல்ல. குளித்து விட்டோ, குளிக்காமலோ அவள் வேறு உடை மாற்றிக் கொண்டிருக்கிறாள். சங்கர்லால் அவளுடைய வலது கையை உற்றுப் பார்த்தார். வலது கையில் -

சங்கர்லால் பெரிதாக எதையோ தெரிந்து கொண்டதைப் போல மகிழ்ந்தார். அதை அவர் வெளியே காட்டிக் கொள்ளாமல், தான் வந்திருப்பதை அறிவிப்பதற்காக மெல்ல இருமினார். இருமும் ஒலி கேட்டதும் -

இந்திரா நிமிர்ந்து பார்த்தாள்.

கதவோரத்தில் அசையாமல் நின்று கொண்டிருந்த சங்கர்லாலைப் பார்த்ததும் திடுக்கிட்டு எழுந்திருக்க முயன்றாள்.

சங்கர்லால் விரைந்து வந்து, 'அப்படியே இருங்கள். எனக்காக எழுந்து துன்பம் கொள்ள வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டே இந்திராவின் கைமாறுதலை உற்றுக் கவனித்தார்.

இந்திரா தன் தலையைச் சரிப்படுத்திக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

சங்கர்லால், அவர்களுக்கு அருகில் வந்து சாய்வு நாற்காலியைப் பிடித்துக் கொண்டு, குனிந்து, 'இரவில் நன்றாகத் தூங்கினீர்களா?' என்று மெல்லக் கேட்டார்.

உடனே பதில் வரவில்லை. கொஞ்சதூரம் கழித்து, 'கொஞ்சம் தூங்கினேன்?' என்று பதில் வந்தது.

'குளித்தீர்களா?' என்று கேட்டார் சங்கர்லால்.

இந்தக் கேள்வியை இவர் ஏன் கேட்கவேண்டும் என்று சங்கர்லாலின் முகத்தைப் பார்த்தாள் இந்திரா. அந்த முகத்திலிருந்து

அவளால் எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இமைகளைத் தாழ்த்திக் கொண்டு, இல்லை, உடையை மட்டும்தான் மாற்றிக் கொண்டேன் என்றாள். ஆனால், அவளுக்கு அடுத்த விநாடி என்ன தோன்றியதோ, தெரியவில்லை. அவள் மிகவும் சினத்தோடு, நான் குளிக்கிறேன், குளிக்கவில்லை. தேவையில்லாத, இந்த மாதிரிக் கேள்விகளையெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்? என்று கடுமையாகக் கேட்டாள்! சினத்தால் அவள் முகம் சிவ்வென்று சிவந்துபோயிற்று.

சங்கர்லால், அவளைப் பார்த்து சிரித்துக் கொண்டே நான் எப்பொழுதும் தேவையற்ற கேள்விகளைக் கேட்பதில்லை, இந்திராதேவி! நான் இந்தக் கேள்வியை ஏன் உங்களிடம் கேட்டேன் என்பதை நீங்கள் அறிந்தால், உடனே மயக்கம் கொள்வீர்கள்!'

'நான் கோழை அல்ல. சொல்லுங்கள்' என்றாள் இந்திரா, துடிதுடிப்புடன்.

'நீங்கள் பணக்காரியாக இருக்கலாம் இந்திராதேவி! ஆனால், அதற்காகக் குற்றத்தை மறைக்கச் சினம் கொள்ளக் கூடாது!' என்றார் சங்கர்லால்.

'நீங்கள் மழுப்ப வேண்டாம். என்னைக் குளித்தீர்களா என்று ஏன் கேட்டீர்கள்?'' என்று மறுபடியும் கேட்டாள் இந்திராதேவி.

சொல்லுகிறேன் இந்திராதேவி. ஆனால் நான் சொன்ன பிறகு நீங்கள் அழாதீர்கள். அதுதான் என் வேண்டுகோள். நேற்று உங்கள் கையிலிருந்த வளையல்களைப் பார்த்தேன். நேற்று உங்கள் வலது கையில் நான்கு வளையல்களை இருந்தன. அந்த நான்கு வளையல்களிலும் உங்கள் அப்பாவின் இரத்தம் மெல்லியதாகப் பட்டுக் காய்ந்து போயிருந்தது. இப்பொழுது, அந்த நான்கு வளையல்களில் இரண்டைத்தான் நீங்கள் போட்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் கையில் போட்டிருக்கும் இரண்டு வளையல்களிலும் அந்த மெல்லிய இரத்தக்கறையைக் காணோம். நீங்கள் மற்ற இரண்டு வளையல்களை உடைத்தெறிந்து விட்டீர்கள் என்பதில் ஐயம் இல்லை. ஆனால், இப்பொழுது நீங்கள் போட்டுக் கொண்டிருக்கும் வளையல்களில் இருந்த மெல்லிய இரத்தக்கறை நீங்கள் குளிக்கும் போது தண்ணீர் பட்டுக் கரைந்து விட்டதா,

அல்லது நீங்களே வலுவில் தண்ணீர் ஊற்றி, இந்த வளையல்களைக் கழுவி, அந்த மெல்லிய இரத்தக்கறையைப் போக்கினீர்களா என்பதை அறிவதற்காகத்தான், நீங்கள் குளித்தீர்களா என்று கேட்டேன் என்றார் சங்கர்லால்.

இதைக் கேட்டதும், இந்திரா வெலவெலத்துப் போய் 'சங்கர்லால்' என்று, அந்தக் கட்டடமே இடிந்து போவது போல் கத்தினாள்! அடுத்த வினாடி -

இந்திரா மயக்கம் கொண்டாள்.

இதைச் சங்கர்லால் எதிர்பார்த்தார். அதனால், அவர் கொஞ்சம் கூடப் பதறாமல் தன் பக்கவாட்டுக் கால் சட்டைப் பையிலிருந்த ஒரு சிறு துணியை எடுத்து இந்திராவின் மூக்கில் வைத்தார். அதிலிருந்து நெடி கிளம்பியது. அந்த நெடி மணத்தால்-

இந்திரா உடனே கண்களை விழித்துக் கொண்டாள்.

அதற்குள் -

'சங்கர்லால்' என்று இந்திரா போட்ட பெரிய ஒலியைக் கேட்டு வகாப் ஓடி வந்தார். ஓடி வந்ததும், இந்திரா சாய்வு நாற்காலியில் கிடப்பதையும், சங்கர்லால் சாய்வு நாற்காலிக்கு அருகில் நிற்பதையும் பார்த்து, 'என்ன சங்கர்லால், 'சங்கர்லால்' என்று பெரிய ஒலி ஒன்றும் கேட்டதே!' என்றார்.

'ஒன்றும் இல்லை வகாப். நான் இந்திராதேவி கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் சொன்னேன். அதைக் கேட்டதும் 'சங்கர்லால்' என்று கத்திக் கொண்டே இந்திராதேவி மயக்கமடைந்துவிட்டாள். இப்பொழுது அவளுக்கு மயக்கம் தெளிந்துவிட்டது' என்றார்.

அரைகுறை நினைவில் இருந்த இந்திரா, அதைக் கேட்டதும், 'ஆமாம்...ஒ...ன்...றும்...இல்லை' என்றாள் திக்கித் திணறிக் கொண்டு!

இப்படி அவள் சொல்லிவிட்டுச் சற்றுச் சமாளித்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

வதங்கிய பூ, வளைந்த கொடியில் தொங்குவது போல, வாடிய முகம் தளர்ந்த அவள் உடலில் களையற்றிருந்தது.

சங்கர்லால் இந்திராவைப் பார்த்து, ‘இந்திராதேவி, உங்கள் மனம் புண்பட்டதற்கு வருந்துகிறேன். அதற்குக் காரணம், நான் அல்ல. நீங்கள் தான் என்பதை நினைத்து மன அமைதி பெறுங்கள். மீண்டும் நான் நாளை வருகிறேன்’ என்று சொல்லிவிட்டு மெல்லத் திரும்பிக் கார் நின்றிருந்த இடத்துக்கு நடந்தார்.

சங்கர்லாலுக்குப் பின்னாலேயே சென்ற வகாப் காருக்கருகில் நின்று கொண்டிருந்த சங்கர்லாலிடம், ‘சங்கர்லால் என்ன நடந்தது?’ என்று கேட்டார்.

‘நடந்ததைச் சொன்னால் நீங்கள், இன்னும் மிக வருந்துவீர்கள் வகாப்’ - என்றார் சங்கர்லால்.

‘பாதகமில்லை சங்கர்லால் சொல்லுங்கள்’ என்றார் உதவிப் போலீஸ் கமிஷனர் வகாப்.

‘நேற்று நான் இந்திராவோடு பேசிக் கொண்டிருக்கும் பொழுது தற்செயலாக அவள் வலது கையைப் பார்த்தேன். அப்பொழுது, அவள் வலது கையில் நான்கு வளையல்கள் இருந்தன. அந்த நான்கு, வளையல்களிலும் இரத்தக் கறை படிந்திருப்பதைப் பார்த்தேன். ஆனால், இன்று பார்த்த போது, அவள் வலது கையில் இரண்டு வளையல்களிலும் படிந்திருந்த இரத்தக் கறையைப் போக்கி விட வேண்டும் என்பதற்காக, அந்த நான்கு வளையல்களையும் கழட்டித் தண்ணீரில் கழுவி இருக்கிறாள். முதல் இரண்டு வளையல்களில் இரத்தக்கறை நன்றாகப் படிந்து காய்ந்து போயிருந்ததால், எவ்வளவு கழுவியும் அந்தக் கறை போகவில்லை. அதனால், அந்த இரண்டு வளையல்களையும் உடைத்தெறிந்து விட்டாள். பின் இரண்டு வளையல்களிலும் இரத்தம் சிறிது தான் பட்டிருந்தது. அதனால் அதை நன்றாகக் கழுவிவிட்டுப் போட்டுக் கொண்டு விட்டாள். இன்று நான் வந்ததும் அவள் வலது கையைப் பார்த்தேன். அவள் வலது கையைப் பார்த்ததும் விவரத்தைப் புரிந்துகொண்டேன். அவள் அந்த விவரத்தை மறைக்கப் பார்க்கிறாளா இல்லையா என்பதை அறிய வேண்டும் அல்லவா? அவள் மறைக்கப் பார்த்தால், அவள் அப்பா கொலைக் குற்றத்தில் அவளுக்குப் பங்கு உண்டா இல்லையா என்பதை அறிந்து விடலாம் அல்லவா? அதற்காக அதை அறிவதற்காக, தொடர்பு இல்லாமல் கேட்பது மாதிரி, ‘குளித்தீர்களா?’ என்று கேட்டேன். அந்தக்

கேள்விக்கு அவள் சட்டென்று பதில் சொல்லாமல், என் முகத்தைப் பார்த்தாள். என் முகத்திலிருந்து அவள் எதைத் தெரிந்து கொள்ள முடியும்? கொஞ்சம் தயங்கிவிட்டு இல்லை உடையை மட்டுந்தான் மாற்றிக் கொண்டேன் என்றாள். அதோடு அவள் சும்மா இருந்திருக்கலாம். என்னை மிரட்டினால், நான் அவளிடம் ஐயப்பட மாட்டேன் என்று நினைத்துக் கொண்டு, 'நான் குளிக்கிறேன், குளிக்கவில்லை; தேவை இல்லாத இதுபோன்ற கேள்விகளையெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்? என்று கடுமையாகக் கேட்டாள். சினத்தால் அவள் முகம் சிவ்வென்று சிவந்து விட்டது. நானா இதற்கெல்லாம் தயங்குபவன்? விவரத்தைச் சொல்லிவிட்டேன். விவரத்தைக் கேட்டதும், எதிர்பாராத தாக்குதலால், 'சங்கர்லால்' என்று கத்திவிட்டு மயக்கம் கொண்டுவிட்டாள். அவள் மயக்கத்தைத் தெளிவித்த பிறகுதான், நீங்கள் வந்தீர்கள்' என்று நடந்தது முழுவதையும் சொன்னார் சங்கர்லால்.

இதைக் கேட்ட வகாப், தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக இருந்தார்! அவருக்கிருந்த வருத்தம், மிகவும் மிகுந்துவிட்டது!

சங்கர்லால் சிரித்துக்கொண்டே, 'உங்கள் வருத்தம் இப்பொழுது மிகுதியாகிவிட்டது! இல்லையா? இதற்காகத்தான் நான் தொடக்கத்திலேயே 'நடந்ததைச் சொன்னால் நீங்கள் இன்னும் வருந்துவீர்கள், என்று சொன்னேன்' என்றார்.

வகாப், "வருத்தம் கொள்ளாமல் எப்படி இருக்க முடியும் சங்கர்லால்? இப்பொழுது கொலைக் குற்றத்தில் இந்திராவிற்கும் பங்கு உண்டு என்பது உறுதியாகிவிட்டதே!'' என்றார் ஏக்கத்தோடு!

'இதற்கு நாம் என்ன செய்ய முடியும் வகாப்? அவளுக்கு இந்தக் கொலைக் குற்றத்தில் தொடர்பு உண்டு என்பதைத் தான், நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே? நீங்கள் பல குழந்தைகளுக்குத் தந்தை. அதனால் இந்திராவையும் உங்கள் குழந்தை போல நினைத்து வருந்துகிறீர்கள்' என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிக் கொண்டார் சங்கர்லால்.

கார் புறப்பட்டது.

வகாப், அந்த இடத்திலேயே தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக நின்று கொண்டிருந்தார்.

அவர் விழிகளில் கண்ணீர் நிரம்பி நின்றது!

## 2

மறுநாள், காலை ஒன்பது மணி இருக்கும், சங்கர்லாலின் கார், போலீஸ் பங்களாவின் வாயிலில் வந்து நின்றது. காருக்குள்ளிருந்த சங்கர்லால், கீழே இறங்கிப் பங்களாவிற்குள் நுழைந்து, இந்திராதேவி இருந்த இடத்திற்கு வந்தார். அங்கே வந்ததும் அறைக் கதவுக்கருகிலேயே நின்றுவிட்டார் சங்கர்லால். உள்ளே -

இந்திராதேவி, கூண்டில் அடைபட்டுத் தொங்கும் கூண்டுக்கிளியையே பார்த்துக் கொண்டு, அசையாமல் நின்று கொண்டிருந்தாள். கூண்டுக்கிளியும் அசையவில்லை!

கூண்டுக் கிளியையே வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்த இந்திராவைக் கண்டு இளகியது சங்கர்லாலின் மனம். ஆனால் -

சங்கர்லால் வந்து கதவோரத்தில் நின்றது, இந்திராவிற்குத் தெரியவே இல்லை.

அந்தப் பச்சைக்கிளி, சிறிய கூண்டில் அடைக்கப் பட்டிருந்தது; இந்தச் சிவப்புக்கிளி, பெரிய கூண்டில் அடைக்கப்பட்டிருந்தது. இதுதான் -

'அம்மா யாரோ வந்திருக்கிறார்கள்' என்றாள் தண்ணீர் கொண்டுவர வெளியே கிளம்பிய வேலைக்காரி.

இந்திரா சட்டென்று திரும்பிப் பார்த்தாள். கதவோரத்தில் சங்கர்லால் நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததும், 'வாருங்கள்' என்று சொல்லிவிட்டுத் தன் தலைச் சேலையைச் சரிபடுத்திக் கொண்டாள்.

சங்கர்லால், அவளுக்கு அருகில் வந்து நின்று கொண்டு, 'அடிக்கடி இங்கே வந்து உங்களுக்குத் துன்பம் தருகிறேன். மன்னியுங்கள்' என்றார்.

இதைக் கேட்டதும் இந்திரா மெல்லச் சிரித்து விட்டு 'உங்கள் கடமையை நீங்கள் செய்து தானே ஆக வேண்டும்?' என்று சொல்லிவிட்டு, உள்ளே போய்க் கொஞ்ச நேரத்தில், கையில் தேநீருடன் வந்தாள்.

அவள் அங்கிருந்த மேசையின் மேல் தேநீரை வைத்துவிட்டு, 'தேநீர் குடியுங்கள்' என்றாள்.

சங்கர்லாலுக்குத் தூங்கிவாரிப் போட்டது! அவர் இதை எதிர்பாக்கவே இல்லை. இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் நாற்காலியில் உட்கார்ந்து சூடாக இருந்த தேநீரைக் குடித்தார். தேநீர் முழுவதையும் குடித்துவிட்டு, 'எனக்குத் தேநீர் பிடிக்கும் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்' என்று வியப்புடன் கேட்டார்.

'எனக்கு மட்டும் என்ன! சங்கர்லாலுக்குத் தேநீர் பிடிக்கும் என்பது உலகமே அறிந்த செய்தியாயிற்றே?' என்றாள், அவருக்கு அருகில் நின்றுகொண்டிருந்த இந்திரா சற்று சிரித்துக் கொண்டு.

'அது சரி, உள்ளே போனவுடன் தேநீர் கொண்டு வந்துவிட்டீர்களே, எப்படி!'' என்று கேட்டார் சங்கர்லால் இன்னும் வியப்புடன்.

'நீங்கள், இப்பொழுது இந்நேரத்தில்தானே வந்து கொண்டிருக்கிறீர்கள். அதனால், நீங்கள் வரும் நேரமாயிற்றே என்று தேநீரைப் போட்டு வைத்தேன். நீங்களும் வந்து விட்டீர்கள்'' என்று சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் இந்திரா.

சங்கர்லால் கொஞ்ச நேரம் சிந்தித்துவிட்டு பிறகு, 'உங்கள் தந்தை கொலை செய்யப்பட்ட பிறகு இன்றைக்குத் தான் நீங்கள் கொஞ்சம் மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். நான் நினைப்பது சரியா?' என்று கேட்டார் இந்திராவிடம்.

'நீங்கள் நினைப்பது எப்பொழுதுமே தவறாக இருக்காது' என்றாள் இந்திரா, மெல்லத் திரும்பி வேறு திசையில் பார்த்துக் கொண்டு.

''நான் உங்களைச் சந்தித்ததிலிருந்து உங்கள் நிலைமையில் இன்று தான் நீங்கள் கொஞ்சம் மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். என் கருத்து உண்மையா?'' என்றார் சங்கர்லால்.

இந்தக் கேள்விக்கு அவள் என்ன பதில் சொல்லப் போகிறாள் என்பதை அறிவதற்காகச் சங்கர்லால், தன் காதுகளைச் சரியான நிலையில் வைத்துக் கொண்டு, கண்களைச் சிறிது மூடிக் கொண்டார்.

கொஞ்ச நேரம்கழித்து, 'இருக்கலாம்' என்றாள் இந்திரா.

அவள் இப்படிச் சொன்னதும், அவள் முகத்தில் மாறுதல் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிவதற்காகச் சங்கர்லால் கண்களைத் திறந்து பார்த்தார். அந்த முகம் -

அவருக்குத் தெரியவில்லை. தன் முகத்தைச் சங்கர்லால் பார்க்கக் கூடாது என்பதற்காகவே அவள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டுவிட்டாள்!

அது மட்டுமல்ல அந்த இடத்தை விட்டே நகர்ந்து மெல்லத் தாழ்வாரத்தில் போய் நின்றாள்.

சங்கர்லாலும், உடனே எழுந்து தாழ்வாரத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்த இந்திராவிடம் போய், மெல்ல, 'நான் அடிக்கடி கேள்விகள் கேட்டுக் கொண்டே இருக்கிறேன் என்று இங்கே வந்துவிட்டீர்களா என்ன?' என்று கேட்டார்.

இந்திரா, சங்கர்லாலின் பக்கம் திரும்பி நின்று கொண்டு, 'அதற்காக இல்லை. நீங்கள் எத்தனை கேள்விகள் கேட்டாலும் நான் பதில் சொல்லக் காத்திருக்கிறேன்' என்றாள்.

'அப்படியானால், ஏன் இங்கே வந்தீர்கள்?' என்று கேட்டார் சங்கர்லால்.

'சொல்லட்டுமா? சொன்னால் நீங்கள் சினம் கொள்ள மாட்டீர்களே?

'எனக்குச் சினமே வராது இந்திராதேவி.

'உங்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருப்பதற்கு அச்சமாக இருக்கிறது! அதனால்தான் மெல்ல இந்தப் பக்கம் வந்து விட்டேன்!''

இது மட்டுந்தானா?

'நீங்கள் மறுபடியும் தேநீர் கேட்பீர்கள் என்பது மற்றொரு காரணம் - இதைச் சொல்லிவிட்டு வாயைத் திறந்து கலீர் கலீர் என்று சிரித்தாள் இந்திரா! அவள் சிரிப்போசை பங்களா முழுவதும் எதிரொலித்தது!

சங்கர்லாலின் மூளை புதுக் கோணத்தில் வேலை செய்யத் தொடங்கியது.

சங்கர்லால் சிரித்துக் கொண்டு, 'அஞ்சாதீர்கள் இந்திரா தேவி. என்னைக் கண்டு அச்சப்பட வேண்டிய தேவை இல்லை. என்னைக் கண்டு நீங்கள் ஏன் அஞ்ச வேண்டும்? என்னைக் கண்டு நீங்கள் அச்சப்பட நான் என்ன சிங்கமா? கரடியா? இதோ பாருங்கள் என் முகம் எவ்வளவு சுத்தமாக சவரம் செய்யப்பட்டிருக்கிறது என்று! - இப்படிச் சொல்லிவிட்டுத் தன் முகத்தைத் தடவிக் காண்பித்தார் சங்கர்லால்.

இந்திரா சிரித்தாள்.

'இந்திராதேவி! என்னைக் கண்டு நீங்கள் எப்பொழுதுமே அச்சப்பட வேண்டிய தேவையில்லை. நான் நல்லவன். நான் ஒரு தேநீர் பைத்தியம் தான். இருந்தாலும் பிறரிடம் நானே வலுவில் கேட்டு வாங்கிக் குடிக்கும் அளவிற்கு நான் பைத்தியமல்ல' என்றார் சங்கர்லால்.

'அப்படியானால் இருங்கள். இதோ தேநீர் கொண்டு வருகிறேன்' என்று சொல்லிவிட்டுக் கலகலவென்று சிரித்துக் கொண்டே ஓடினாள் இந்திரா.

இந்திராவின் இன்றையப் போக்கு, சங்கர்லாலின் சிந்தனையில் விரைவாக வேலை செய்தது.

கொஞ்ச நேரத்தில் இந்திரா, கையில் தேநீருடன் வந்தாள். சங்கர்லாலுக்கு அருகில் வந்ததும் தன் கையில் இருந்த தேநீரை அவரிடம் கொடுத்தாள்.

சங்கர்லால் தேநீரை வாங்கும் போது அவள் கைகளைப் பார்த்தார்.

அவள் கைகளில் வளையல்களே இல்லை. இரண்டு கைகளும் வெறும் கைகள்!

சங்கர்லால், அதைப் பற்றி இந்திராவிடம் எதுவுமே கேட்கவில்லை. அவள் கைகளை, அவள் பார்த்ததாகவும் காட்டிக் கொள்ளவில்லை.

தேநீரை மெல்ல மெல்லக் குடித்துவிட்டு காலிக் கோப்பையை இந்திராவிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கிக் கீழே வைத்தாள்.

சங்கர்லால், தன் பக்கவாட்டுப் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து வாயைத் துடைத்துக் கொண்டே, 'என்னதான் இருந்தாலும், எங்கள் மாது போடும் தேயிலைக்கு இணையாகாது இந்திராதேவி' என்றார்.

"உங்கள் வீட்டில் ஒரு மாது இருக்கிறாளா? பெண் என்று சொல்ல மாட்டீர்கள் போலிருக்கிறது! மாது என்று தான் சொல்வீர்கள் போலிருக்கிறது!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் இந்திரா.

'இந்திராதேவி, மாது என்னை எப்பொழுதும், தன் இமைகளுக்குள் வைத்துக் காப்பவன். எனக்கு அவன் கண்கண்ட தெய்வம். அவனுக்காக நான் எந்தத் தியாகத்தையும் செய்யக் காத்திருக்கிறேன்' என்றார், சங்கர்லால்!

'உங்களையும், ஆட்டிவைக்க ஓர் ஆள் இருக்கிறதா? வேண்டியதுதான், இல்லாவிட்டால், உங்கள் படுசுட்டித்தனம் அடங்கவே அடங்காது' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் இந்திரா.

'இந்திராதேவி, நீங்கள் இன்றைக்கு மிகவும் சிரிக்கிறீர்கள். உங்களுடைய இன்றைய நடவடிக்கைகளைப் பார்த்தால் நேற்றுவரை இருந்த இந்திரா வேறு, நீங்கள் வேறு என்று எனக்குப் படுகிறது. என் நினைவு சரிதானோ?' என்று சொல்லிவிட்டு, இந்திராவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார் சங்கர்லால்.

இதைக் கேட்டதும், இந்திராவின் முகத்தில் திடீரென்று கருமை படர்ந்தது. இருந்தாலும், அவள் சமாளித்துக் கொண்டு,

மெல்லச் சிரித்துவிட்டு, "ஆமாம் நேற்றுவரை இருந்த இந்திரா வேறு! நாளைக்கு வந்து நீங்கள் பார்க்கப் போகும் இந்திரா வேறு! துப்பறியும் தன்மை உங்களுக்கு மிதமிஞ்சிவிட்டது! இறந்து போன என் அம்மாவுக்கு நான் ஒரே பெண் தான் ஐயா?" என்று சொல்லி விட்டு, மீண்டும் -

சிரித்தாள்.

'இருக்கலாம் இந்திராதேவி. இருந்தாலும் ஒருவரைப் போலத் தோற்றம் உள்ள மற்றொருவரும் உண்டு!' என்றார் சங்கர்லால்!

'தேவை இன்றி மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள். நேற்று முன் நாளில் நீங்கள் பார்த்த இந்திரா. இதோ இப்போது நீங்கள் பார்க்கும் இந்திரா. நாளை நீங்கள் பார்க்கப் போகும் இந்திரா... எல்லாம் நான்தான்? இதில் உங்களுக்கு ஐயமே வேண்டாம். என் குணம் ஒரு மாதிரி. நான் பணக்காரி, செல்லமாக வளர்க்கப்பட்டவள். அதனால் என் குணம், ஒரு நாளைக்கு ஒரு மாதிரியாக இருக்கும். ஒரு நாளைக்கு நான் எரிந்து விழுவேன். ஒரு நாளைக்கு நான் அழுதுகொண்டே இருப்பேன். ஒரு நாளைக்கு நான் சிரித்துக் கொண்டிருப்பேன். ஒரு நாளைக்கு நான் சிரித்துக் கொண்டிருப்பேன். ஒரு நாளைக்கு' என்று இந்திரா சொல்லி முடிப்பதற்குள் -

'போதும் தேவி புரிந்தது! தயவு செய்து உங்கள் மேடைப் பேச்சை நிறுத்திக் கொள்கிறீர்களா? எனக்கு இருந்த குழப்பத்தை நீக்கி, எனக்கு ஏற்பட்ட ஐயத்தைப் போக்கி, எனக்குத் தெளிவை உண்டாக்கியதற்காக நன்றி' என்றார் சங்கர்லால்.

'தேவியா? ஐயோ பாவமே! அதற்குள் என்னை மேல் உலகத்தில் அனுப்பி விட்டீர்களே!' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் இந்திரா.

அவள் வேண்டும் என்றே சிரிக்கிறாள். அவள் சிரிப்பில் உயிர் இல்லை என்பதை எப்பொழுதோ புரிந்து கொண்டு விட்டார் சங்கர்லால்.

'காசு இல்லாதவர்கள்தாம் கனவு காண்பார்கள், தங்களுக்கு மேல் உலகம் கிடைக்குமா என்று! உங்களுக்கென்ன? நீங்கள் கோடீசுவரி. பணமுள்ள உங்களைப் போன்றவர்களுக்கு இதுவே